# மாலை முரசு

பக்கங்கள் 18

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 13 சனிக்கிழமை 30.09.2023 அதிர்வு 61


## மரத்திலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்!

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோணகல பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மரத்தில் இருந்து கீழே தவறி விழுந்து சாவடைந்துள்ளார்.

பலாக்காய் பறிப்பதற்காகச் செண்பக மரம் ஒன்றில் ஏறி பலா மரத்துக்கு 04

### முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகல் குறித்து

# முழுமையான விசாரணைக்கு ஜனாதிபதி அதிரடி உத்தரவு!



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு இந்தச் சம்பவத்துக்கான மூல காரணத்தை உடனடியாக ஆய்வு செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவு விடுத்துள்ளார்.

இதையடுத்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருடன் இந்தச் சம்பவம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். 04

# நீதிபதியை நான் அச்சுறுத்தவில்லை!

### அவர் நாட்டை விட்டு வெளியேறியமை பாரதூரமானது என்கிறார் சரத் வீரசேகர



”முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்று கூறப்படுவது பாரதூரமானது. எனது நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி அவரை நான் அச்சுறுத்தவில்லை.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

”புகலிடக் கோரிக்கைக்காக நீதிபதி இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளாரா என்பதும் பிரச்சினைக்குரியதாக உள்ளது. நீதிபதி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவரது குடும்பத்தார் 04

# நீதிபதிக்கே உயிர் அச்சுறுத்தலா? சுயாதீன விசாரணை வேண்டும்

### அமைச்சர் ஜீவன் வலியுறுத்து



“சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் நீதிபதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். எனவே, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.”

– இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான 04

# நீதித்துறையே மக்களின் இறுதி நம்பிக்கைக் கீற்று

### அதன் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறார் திகா எம்.பி.



“முல்லைத்தீவுமாவட்டநீதிபதிரி.சரவணராஜாவின் இராஜிநாமாவானது, நாட்டின் சட்டத்துறையைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது” – என்று தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“ஒரு நாட்டின் நீதித்துறை என்பது பிரஜைகளின் 04


உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# காணாமல்போயிருந்த பெண் தலையின்றிச் சடலமாக மீட்பு!

கொழும்பில் தலை வெட்டப்பட்ட பெண்ணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேற்கொண்ட விசாரணையில் பல்வேறு தகவல்கள் பெறப்பட்டுள்ளன என்று அவர் கூறியுள்ளார்.

முல்லேரியாவில் 51 வயதான டி.ஜி.பிரதீபா என்ற பெண்ணைக் கடந்த 27ஆம் திகதி காலை முதல் காணவில்லை என்று அவரது மகள் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் முல்லேரிய பொலிஸ் நிலையத்தால் பொலிஸ் குழுவொன்று அன்றைய தினம் சிசிரீவி தரவுகளை பரிசோதித்துள்ளனர்.

இதன்போது, அந்தப் பெண் அங்கொடையிலிருந்து கடுவெல பகுதிக்கு நீல நிற ஓட்டோவில் சென்றுள்ளமை தெரியவந்தது.

கடுவெல நகரின் மையத்தில் அமைந்துள்ள கடை ஒன்றின் முன், வாகனம் நிறுத்தும் இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரின் சாரதி இருக்கையில் இருந்த நபருடன் அவர் உணவு கடைக்கு செல்லும் காட்சி அங்குள்ள சிசிரீவி கமராவில் பதிவாகியுள்ளது.

சுமார் 10 நிமிடத்தில் இருவரும் அங்கிருந்து 'கே.ஐ. – 3030' என்ற சாம்பல் நிற காரில் புறப்பட்டுச் சென்றுள்ளனர். இந்நிலையில் இந்தப் பெண் காணாமல் போயிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கார் தொடர்பில் முல்லேரிய பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது அது சியம்பலாப்பே பிரதேசத்தை சேர்ந்த வர்த்தகர் சுதீர வசந்த என்பவருடையது எனதெரியவந்துள்ளது.

இந்தப் பெண் வர்த்தகருடன் சுமார் 20 வருடங்களாக நெருங்கிய உறவில் இருந்துள்ளார். பணப் பிரச்சினை காரணமாக இருவருக்கும் சிறிது காலமாக தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

சியாம்பலாப்பே பகுதியில் உள்ள கைவிடப்பட்ட வீடொன்றை பொலிஸார் சோதனையிட்ட போது, ஒரு அறைக்குள் நீண்ட முடி, இரத்தக் கறைகள் மற்றும் வீட்டின் வெளியே பகுதியளவு எரிந்த நிலையில் இரத்தக் கறையுடன் கூடிய பெண்களின் ஆடை பாகங்கள் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சப்புகஸ்கந்த பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, நேற்று பிற்பகல் அந்த வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் களனி கங்கைக்கு அருகில் தலை மற்றும் கைகால்கள் இல்லாத பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேற்கொண்ட விசாரணையில் சடலம் காணாமல் போயிருந்த 51 வயதுடைய டி.ஜி.பிரதீபா என்ற பெண்ணின் சடலம் என, உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சந்தேக நபரான வர்த்தகருக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லேரிய பொலிஸார் மற்றும் சபுகஸ்கந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காலி கடலில் நீராடச் சென்ற 14 வயதுச் சிறுவன் மாயம்!



காலி – கொக்கல பகுதியில் உள்ள கடலில் நீராடச்சென்ற 14 வயதுடைய சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வரகாபொலவில் இருந்து சுற்றுலா சென்று கொக்கல முகத்துவாரத்துக்கு அருகில் உள்ள கடலில் நேற்று (29) மாலை நீராடச் சென்ற சிறுவனே கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என்று ஹபராதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வரகாபொல, மில்லகஹதொல, கணித்தபுர பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய சிவ ஆகாஷ் என்ற சிறுவனே கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் காணாமல் போன சிறுவனை கண்டுபிடிக்க கடற்படை வீரர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை கொக்கல கடலில் நீரா டச் சென்ற வெளிநாட்டவர் ஒருவரும் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு கராப்பிட்டிய வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பாதுகாப்பற்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களை நீராட அனுமதிக்கப்படுவது தடுக்கப்படவேண்டும் என்று பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

# வவுனியாவில் கிணற்றில் 14 கைக்குண்டுகள் மீட்பு!

வவுனியா – மூன்றுமுறிப்பு, சாச்சாங்குளம் பகுதியில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் ஒருவரின் காணியில் அமைந்துள்ள கிணற்றில் இருந்து நேற்று (29) 14 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கிணற்றில் பொருள்கள் இருப்பதை அவதானித்த காணி உரிமையாளர் உடனடியாக வவுனியா பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து பொலிஸாரின் உதவியுடன் அக்கிணற்றை சோதனையாட்டனர்.

இதன் போது 14 கைக்குண்டுகளும் வேறு சில பொருடள்களும் மீட்கப்பட்டுள்ளன. அந்த இடத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வவுனியா பெலிஸர் மேற்கொண்டு வருகின்றனர்.



# கொழும்பில் சீன தேசியக் கொண்டாட்டம்: முன்னாள் ஜனாதிபதிகள் பங்கேற்றனர்

74 ஆவது சீன தேசிய தின கொண்டாட்டத்தில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் நால்வருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரேஇவ்வாறு கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கையை வறுமைப் பொறியில் இருந்து விடுவித்து அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென்ஹாங் தெரிவித்துள்ளார்.

74 அவது சீன தேசிய தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த நாட்டுக்கான சீன தூதுவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்த 74 ஆவது சீன தேசிய தின விழா நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.



# மருந்துக் கொள்வனவு மோசடியை ஆராய நியமிக்கப்பட்டுள்ளது குழு!

## அதன்மீது திருப்தி இல்லை என்கிறது முன்னிலை சோசலிசக் கட்சி

மருந்துக் கொள்வனவில் இடம்பெற்ற பாரிய மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தொடர்பில் திருப்தியடைய முடியாது என்று முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

மருந்துக் கொள்வனவு தொடர்பான கேள்வி கோரல் நடைமுறையில் ஈடுபட்ட அதிகாரிகளே உரிய குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அந்தக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

மிகக்குறைந்த விலையில் மருந்துகளை கொள்வனவு செய்யக் கூடிய நிலை இருந்தும், அதிக விலைக்கு கொள்வனவு செய்து இந்த மோசடி இடம்பெற்றுள்ளது என்று புபுது ஜயகொட குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மருந்தை 0.15 டொலருக்கு வாங்கலாம் என்றும், ஆனால் ஒரு மருந்தை 10.03 டொலருக்கு வாங்கப்படுகிறது என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் சுமார் 10 கோடி அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது என்று புபுது ஜயகொட குறிப்பிட்டுள்ளார்.

இது இலங்கை பணத்தில் 30 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்பியனானது பருத்தித்துறை பிரதேச செயலகம்

யாழ். மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி சம்பியனாகியுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண போட்டிகளின் ஒரு பகுதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

அதன்படி இங்கு நடைபெற்ற கிரிக்கெட் தொடரில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி, முதல் சுற்றில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியை வீழ்த்தியது. பின்னர் காலிறுதியில் உடுவில் பிரதேச செயலக அணியை வீழ்த்தி, அரையிறுதிக்கு முன்னேறியது.

அரையிறுதியில் மிகவும் பலம் பொருந்திய சாவகச்சேரி பிரதேச செயலக அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.



இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது.

இதிலும் தமது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி மிக இலகுவாக யாழ். மாவட்ட செயலக அணியை வீழ்த்திய பருத்தித்துறை பிரதேச செயலக அணி வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நீதிபதியை நான்...

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கலாம்" – என்றும் சரத் வீரசேகர எம்.பி. கூறினார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக தனது பதவியில் இருந்து விலகுவதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார். அத்துடன் அவர் நாட்டை விட்டும் வெளியேறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கருத்துத் தெரிவிக்கும்போது மேலும் கூறியதாவது:–

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு நான் அச்சுறுத்தல் விடுத்ததாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் என்னைச் சுட்டிக்காட்டி அறிக்கை வெளியிட்டுள்ளதை அவதானித்துள்ளேன்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. நாடாளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி நான் நீதிபதியை அச்சுறுத்தவில்லை. நீதிமன்ற நடவடிக்கையில் நான் தலையிடவும் இல்லை.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிபதி பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்று குறிப்பிடுவது பாரதூரமானது. நாட்டில் நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லையென்றால் சாதாரண மக்களின் நிலை எவ்வாறு அமையும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

சட்டம் மற்றும் பாதுகாப்புத்துறை மீதான மக்களின் நம்பிக்கை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இதனை அலட்சியப்படுத்த முடியாது.

நீதிபதி குறிப்பிடுவதைப் போன்று அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்திருந்தால் அவர் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். அல்லது பொறுப்பான தரப்பினருக்கு அறிவித்திருக்கலாம். உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் அவர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தாரா என்பதை அறியவில்லை.

கடந்த காலங்களில் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக்கொள்வதற்காகப் பலர் தமக்கு இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்பதையே சர்வதேசத்திடம் முன்வைத்தார்கள். இந்தக் குற்றச்சாட்டும் புகலிடக் கோரிக்கையை நோக்கமாகக் கொண்டுள்ளதா என்பதும் பிரச்சினைக்குரியதாக உள்ளது.

எவ்வாறு இருப்பினும் நீதிபதி குறிப்பிட்ட விடயங்கள் பாரதூரமானவை. இவ்விடயம் தொடர்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் நீதி அமைச்சருடன் பேச்சில் ஈடுபடுவேன்." – என்றார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவை அச்சுறுத்தும் வகையில் சரத் வீரசேகர செயற்பட்டு வந்தமை தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### நீதிபதிக்கே உயிர்...

ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது தொடர்பில் பிரஸ்தாபிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறிய விவகாரம் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் பணியாற்றிய நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல் குறித்து நான் மிகவும் கவலை அடைந்துள்ளேன். குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு அவருக்கு எதிராக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள விவகாரம் நீதித்துறையின் நிலை குறித்து கேள்வியை உருவாக்கியுள்ளது.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் நீதிபதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களுக்கு எதிரான அச்சுறுத்தலானது நீதி மற்றும் ஜனநாயகத்திற்கு எதிரான அச்சுறுத்தலாகும். எனவே, நேர்மையுடன் நீதி வழங்குபவர்களைப் பாதுகாப்பதும், அவர்களுக்கு ஆதரவளிப்பதும் நமது கூட்டுப் பொறுப்பாகும்.

மேற்படி சம்பவம் தொடர்பில் முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைக்கு அழைப்பு விடுக்கும் தரப்புகளுடன் நானும் இணைகிறேன். உண்மை கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குருந்தூர்மலை வழக்கில் மட்டுமல்ல, நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாப்பதிலும், நீதி நிலைநாட்டப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்." – என்றுள்ளது.

### நீதித்துறையே மக்களின்...

இறுதி நம்பிக்கைக்குரிய இடமாகும். நீதித்துறை அரசியல் அழுத்தங்களுக்குட்படும்போது நீதித்துறை சுயாதீனமாக இருக்க முடியாது. எமது நாட்டில் அத்தகைய ஒரு சூழ்நிலையே உருவாகியுள்ளது.

நல்லாட்சி அரசில் நீதித்துறை சுயாதீனமாக விளங்கியதன் காரணமாகவே நாடாளுமன்றப் பிணக்குகளுக்குக் கூடத் தீர்வு காணப்பட்டது. ஆனால், தற்போது முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா இராஜிநாமா செய்திருப்பது நீதித்துறையில் அரசியல் தலையீட்டை வெளிப்படுத்தியுள்ளது.

சட்டமா அதிபரின் அழுத்தம், உயிர் அச்சுறுத்தல் என்பன அடிமட்ட நம்பிக்கையைத் தகர்க்கக்கூடியது. எனவே, ஜனாதிபதி இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்றுள்ளது.

### முழுமையான விசாரணைக்கு...

இதற்கு முன்னர் மரண அச்சுறுத்தல்கள் தொடர்பில் நீதிபதி முறைப்பாடு செய்யவில்லை எனத் தெரியவந்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேறிய நீதிபதி ரி.சரவணராஜா, தனது இராஜிநாமாக் கடிதத்தை செப்டெம்பர் 23 ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சட்டமா அதிபருக்கு எதிராக நீதிபதி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சட்டமா அதிபரிடம் வினவியுள்ளார். நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஊடாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நீதிபதியுடன் தனது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் கலந்துரையாடியதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

### மரத்திலிருந்து வீழ்ந்து...

மாறுகையிலேயே அவர் தவறி கீழே விழுந்துள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் பசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 44 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசு தோல்வியடைந்துள்ளதன் விளைவையே நீதிபதியின் இராஜினாமா எடுத்துக் கூறுகிறது

## சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் இலங்கைக்கான ஆய்வாளர் அலன் கீனன் தெரிவிப்பு

நல்லிணக்கத்தையும், அரசியல் தீர்வையும் ஆதரிப்பதாகக் கூறும் இந்த அரசு அடிப்படையில் தோல்வியடைந்ததன் விளைவையே, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவின் இராஜினாமா எடுத்துக் கூறுகிறது.

சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக் குழுவின் இலங்கைக்கான ஆய்வாளர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.



நீதிபதி சரவணராஜாவின் இராஜினா மாவை 'பேரிழப்பு'. 'நல்லிணக்கத் தையும், அரசியல் தீர்வையும் ஆதரிப்பதாகக் கூறும் இந்த அரசு அடிப்படையில் தோல்வியடைந்ததன் விளைவே இதுவாகும்.

இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லிம் நீதிபதிகள் சட்டத்தின் அடிப்படையில் சுதந்திரமாகத் தீர்ப்பு வழங்குவதற்கான சூழல் மற்றும் பாதுகாப்பு கிட்டும் வரையில், நாட்டில் நிலையான சமாதானம் அடையப்படுமென எதிர்பார்க்கமுடியாது' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பல்வேறு கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவின் இராஜினாமா தொடர்பில் தீவிர கரிசனையையும், அவருக்கு விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் உயிரச்சுறுத்தல் தொடர்பில் கடும் கண்டனத்தையும் வெளிப்படுத்தியிருக்கும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகுவதாகக் குறிப்பிட்டு நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்குத் தனது இராஜினாமா கடிதத்தை அனுப்பிவைத்திருப்பதாகவும், தற்போது அவர் நாட்டைவிட்டு வெளியேறியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகி பல்வேறு சர்ச்சைகளையும் விமர்சனங்களையும் தோற்றுவித்துள்ளன.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிபதியொருவர் பதவியைத் துறந்து, நாட்டை விட்டு வெளியேறியிருப்பதானது நாட்டின் நீதித்துறை முகங்கொடுத்திருக்கும் அச்சுறுத்தலைக் காண்பிக்கிறது. இது வன்மையான கண்டனத்துக்குரியது.

அதன்படி, இது குறித்துக் கருத்த வெளியிட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் தலைவரும், சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன்,

'ரி.சரவணராஜா கூறியதாக பத்திரிகைகள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருக் கும் செய்திகள் உண்மையானவையாக இருந்தால், இது மிகவும் பாரதூரமான தொரு விடயமாகும்' என்று குறிப்பிட்டார்.

'ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகளில் நீதிபதி சரவணராஜாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமா அதிபரும் அழுத்தம் பிரயோகித்ததாகக் கூறப்படுகின்றது. அதுமாத்திரமன்றி அவருக்கெதிராகச் சிங்கள இனவாதிகளாலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியிருப்பது குறித்த சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதவிவகிக்கும் அதிகாரியொருவரின் பேஸ்புக் பதிவு தற்போது சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது. அப்பதிவு அரச கட்டமைப்புக்களில் இனவாதம் எவ்வாறு ஆழமாக வேரூன்றியிருக்கிறது என்பதைக் காண்பிக்கின்றது' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், 'நீதிபதி சரவணராஜாவை புலனாய்வுப்பிரிவினர் தொடர்ச்சியாகக் கண்காணித்துவந்ததாகக் கூறப்படும் விடயம்எமக்குஆச்சரியமளிக்கவில்லை. ஏனெனில் இன்றளவிலே சிவில் சமூகப்பிரதிநிதிகளும், நீதியைக்கோரி கவனவீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் பாதிக்கப்பட்ட தரப்பினரும் புலனாய்வுப் பிரிவினரின் தொடர் கண்காணிப்புக்களுக்கு உள்ளாகிவருகின்றனர்.

அதேபோன்று நீதிபதிக்கு சட்டமா அதிபர் அழுத்தம் பிரயோகித்ததாகக் கூறப்படும் விடயம் உண்மையெனில், அதற்கான அதிகாரம் சட்டமா அதிபருக்கு இல்லை. எனவே இது நீதித்துறை மீதான அரச கட்டமைப்பின் ஆதிக்கத்தைக் காண்பிக்கின்றது' என்றும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான பிரிட்டோ பெர்னாண்டோ இது தொடர்பில் தெரிவிக்கையில்–

'நீதிபதியொருவர் உயிரச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டுவெளியேறுவதென்பது சட்டத்தின் ஆட்சியை முழுமையாகக் கேள்விக்கு உட்படுத்தியிருக்கின்றது. அதேபோன்று குருந்தூர் மலை விவகாரத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை மாற்றுமாறு சட்டமா அதிபர் நீதிபதி சரவணராஜாவுக்கு அழுத்தம் பிரயோகித்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில், இது மிகப்பாரதூரமான விடயமாகும்.

ஏனெனில் ஏற்கனவே 11 பேர் கடத்தப்பட்ட வழக்கில் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டிருந்த முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒஃப் த ப்ளீற் வசந்த கரன்னாகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நீக்குவதில் சட்டமா அதிபரின் வகிபாகம் இருப்பதாக நாம் சுட்டிக்காட்டியிருந்தோம்.

எனவே அப்பின்னணியில் தற்போதைய சம்பவத்தை அணுகும்போது இது உண்மையாக இருக்கக் கூடும் என்ற சந்தேகம் எழுகின்றது. ஆகவே சட்டமா அதிபர் அரசின் கைப்பொம்மையாக செயற்படுவாராயின், அதனை சீரமைக்காமல் நாட்டின் நீதித்துறையை சீர்செய்யமுடியாது.

அதேபோன்று பதவி விலகிய நீதிபதி ஒரு தமிழர் என்பதால், இவ்விடயத்தை இனவாதப்போக்கிலோ அல்லது அசட்டையாகவோ அணுகுவதைவிடுத்து, இதுகுறித்து நீதியை நிலைநாட்டுவதற்கு சகலதரப்பினரும் ஒன்றிணையவேண்டும்' – என்று அறைகூவல் விடுத்தார்.

இந்தச் சம்பவத்தை 'கண்டறியப்படாத, சிகிச்சையளிக்கப்படாத, ஆழமாகப் பரவிய புற்றுநோயின் மற்றுமொரு மாதிரி' என்று வர்ணித்துள்ள கலாநிதி அசங்க வெலிகால, உண்மையான முனைப்பை அடிப்படையாகக் கொண்ட மறுசீரமைப்புக்களின் மூலமே ஸ்திரத்தன்மையை அடையமுடியும் என்றும், அதுவே 'கட்டமைப்பு மாற்றம்' என அடையாளப்படுத்தப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மீண்டும் மின் கட்டண உயர்வு

"வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும், கோலுயரக் கோனுயர்வான்...!" - என்றாள் ஔவைப் பாட்டி. குலோத்துங்க சோழனை வாழ்த்த அவள் பாடிய அடிகள் இவை.

இது பழைய புராணம். புதிய புராணம் என்ன தெரியுமா?

'எரிபொருள் விலை உயர, எல்லாம் விலை ஏறும்...!' என்பதுதான்.

அது ஒரு தொடர் சங்கிலி போல. எரிபொருளின் விலை உயர மின்சாரக் கட்டணம் உயரும். போக்குவரத்து கட்டணம் உயரும். போக்குவரத்துக் கட்டணம் உயர பொருள்களின் விலை எகிறும்.

'வரப்புயர... கோன் உயர்வது' போல்தான் இதுவும்.

இப்போது மீண்டும் ஒரு மின்சாரக் கட்டண உயர்வுக்கு கட்டியம் கூறப்படுகின்றது. அதன் தொடர் உயர்வுகளை இனிப் பார்க்கலாம்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில்திட்டமிடப்பட்டுள்ள மின் கட்டண திருத்தத்தை இப்போதே நடைமுறைக்குக் கொண்டு வந்து நாளை ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. இந்தக் கோரிக்கை தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுளா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், இலங்கை மின்சார சபையின் மின்சார கட்டண திருத்த யோசனையை அவசரமாக பரிசீலிக்குமாறு அமைச்சரவை சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது என்றும் தெரிகின்றது.

இவ்வருடம் எதிர்பார்த்த அளவு நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போனமையினால், மின்சார உற்பத்திக்கு கூடுதல் செலவு ஏற்பட்டதாக அதன் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் 4500 கிகாவாட் நீர் மின் திறன் எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 3750 கிகாவாட் நீர் மின் திறனையே இவ்வாண்டு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

இதற்கமைய, அனல் மின் நிலையங்களில் இருந்து 750 கிகாவாட் நீர் மின் திறனை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. அதற்காக அதிக நிதியை செலவு செய்ய வேண்டியுள்ளது. தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு மின்சார உற்பத்திக்காக செலவிடப்படும் கூடுதல் தொகையை ஈடு செய்யும் வகையில், இந்தக் கோரிக்கை நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மின்சார கட்டணம் அதிகரிப்பால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படும் எனவும் உற்பத்தி பொருள்களின் விலையும் அதிகரிக்கக் கூடிய சாத்தியம் நிலவுவதாகவும் மின்சாரப் பாவனையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

மின்கட்டண திருத்தம் இடம்பெறவுள்ள முறைமை தொடர்பில் இரண்டு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச புதிய மின்சார கட்டண திருத்தத்தின் யோசனைக்கு அமைய, தற்போதைய மாதாந்த மின்சார கட்டணத்துடன் 22 சதவீதத்தை இணைப்பதற்கு இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளது.

அவ்வாறு இல்லாவிட்டால் முதல் 30 வரையான அலகுகளுக்கு அறவிடப்படும் 10 ரூபா என்ற அலகொன்றுக்கான கட்டணத்தை 18 ரூபாவாகவும், 31 முதல் 60 அலகுகளுக்கான கட்டணத்தை 25 ரூபாவிலிருந்து 33 ரூபாவாகவும் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

எப்படிச் செய்தாலும் இத்தகைய அதிகரிப்பு தொழிற்துறையினரை பாதிக்கும் என்பது உறுதி.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை நூற்றாண்டு நிகழ்வுகள் நாளை

கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவுறுவதைக் குறிக்கும் வகையில் கல்லூரித் தினவிழா நாளை (01) ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை, வீ. கருணலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் சாந்தினி வாகீசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கலாசாலையின் ஓய்வுநிலை பிரதி முதல்வர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு எழுதிய வடக்கின் ஆசிரிய கலாசாலைகள் – கோப்பாய் ஆசிரிய கலாசாலை பற்றிய சிறப்பாய்வு என்ற நூல் வெளியிட்டுவைக்கப்படவுள்ளது.

அத்துடன் விரிவுரையாளர் தர்சினி முத்துராஜாவை பிரதம ஆசிரியராகக் கொண்ட கலாதீபம் மாத இதழின் கல்லூரித்தின சிறப்புப் பிரதியும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் சமயத் தலைவர்களின் ஆசியுரை, நூற்றாண்டைக் குறிக்கும் முகமாக 100 நிறை குடங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களுடனான ஊர்வலம் என்பன இடம்பெறவுள்ளன.

## விடுமுறை கால சாரணர் பாசறை





(எம்.எம்.ஜெஸ்மின்)

மாணவர்களிடையே நல்லொழுக்கத்தையும், கடமையுணர்ச்சியையும், தலைமைத்துவ பண்புகளையும் வளர்த்து சமூகத்துக்கு ஏற்ற நல்ல பிரஜைகளை உருவாக்கும் நோக்கோடு கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் சாரணர்களுக்கான 03 நாள் பாசறை கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில், சாரண பொறுப்பாசிரியர் கே.எம். தமீமின் வழிநடத்தலில் சாரணர்களுக்காக போக்குவரத்து சமிக்ஞைகள், திசைகாட்டி வரைபடம், துணிகர செயற்பாடுகள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் சம்பந்தமான விரிவுரை, தீப் பாசறை போன்ற பல செயற்பாடுகள் பயிற்சிகளுடன் வழங் கப்பட்டன.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணிகளிடம் திருடியவர் மாட்டினார்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் விமான சேவை பாதுகாப்பு திணைக்களத்தின் ஸ்கேனிங் இயந்திரத்தை பரிசோதித்த அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

வெளிநாடு செல்வதற்காக வந்த பெண்ணொருவரின் தங்க நெக்லஸ் மற்றும் மற்றொரு பெண்ணின் பென்டன் ஆகியவற்றைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹுனட்டியன பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவராவார்.

சந்தேகநபரிடம் நடத்திய விசாரணையில், திருடப்பட்ட தங்க நகை விற்பனை செய்யப்பட்ட அடகுக் கடையில் இருந்து உருக்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், மற்றொரு பெண்ணின் பையில் திருடப்பட்ட பென்டன் மற்றும் மூன்று மோதிரங்கள் அடகு வைக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

விமான நிலைய பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.



# இந்திய - யாழ்ப்பாண ரோட்டரிகள் சந்திப்பு

**(த.சுபேசன்)**

இந்தியாவைச் சேர்ந்த தமிழ்நாடு மற்றும் கர்நாடக ரோட்டரிக் கழகங்களுக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் ரோட்டரிக் கழகம், சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் மற்றும் நல்லூர் ரோட்டரிக் கழகம் ஆகியவற்றுக்கிடையிலான ஒன்றுகூடல் நிகழ்வு புதன்கிழமை (27) யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரக அதிகாரி ஸ்ரீராம் மகேஸ் கலந்து கொண்டார்.

உதவி ரோட்டரிக் ஒருங்கிணைப்பாளர் சம்பத்குமார், வலுவூட்டலுக்கான துணை மண்டல தூதர் சாய் பிரசன்னா, தனவந்தரி செயற்றிட்ட தலைவர் தாண்டவராஜன் ஆகியோருடன் யாழ்ப்பாண மற்றும் இந்திய ரோட்டரிக் கழக அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நபி தினவிழா





**(சப்னா றிபாஸ், எம்.எப். நவாஸ்)**

தேசிய ஐக்கிய நல்லிணக்க ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் மிலாதுன் நபி தினவிழா அட்டாளைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள சந்தை சதுக்கத்தில் வெள்ளிக்கிழமை (29)நடைபெற்றது. அமைப்பின் தலைவரும், அட்டா ளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உதவித் தவிசாளருமான எஸ்.எஸ்.எம்.ஜெஃபர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மார்க்கஅறிஞர்கள்,கல்வியியலாளர்கள், சட்டத்தரணிகள் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மாணவர் மன்ற பரிசளிப்பு விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி தரம்-7 பகுதியின் முதலாம் தவணை பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளை வகுப்பு வாரியாகவும், பகுதி வாரியாகவும் பெற்ற மாணவர்களுக்கும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பங்கு பற்றிய மாணவர்களுக்கும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் ஆலோசனைக்கு அமைவாக பரிசளிப்பு விழாவும், மாணவர்களின் பல்வேறுபட்ட கலை நிகழ்ச்சிகளும் கல்லூரி கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் மண்டபத்தில் இடம்பெற்றன.

தரம் -7 பகுதித் தலைவர் ஏ.எல். எம்.ஹக்கீம் தலைமையில் அனைத்து வகுப்பாசிரியர்களின் ஒத்துழைப்புடன் விழா நடைபெற்றது.

மாணவர்கள் தங்களது பல்வேறுபட்ட திறன்களை மிக சிறப்பாக பல கலை நிகழ்ச்சிகள் ஊடாக வெளிப்படுத்தினர்.







# மாணவர்கள் கௌரவிப்பு

(எம்.ஏ.ஏ.அக்தர்)

அண்மையில் வெளியிடப்பட்ட க.பொ.த. உயர்தர பரீட்சைக்கான முடிவுகளின் அடிப்படையில் மாத்தறை மாவட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சாதனை படைத்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மாத்தறை ராகுல கல்லூரி கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

பௌதீக விஞ்ஞான பிரிவு ( கணிதம்) மாவட்டத்தில் முதலாம், இரண்டாம் நிலை, தேசிய மட்டத்தில் இரண்டாவது, பதினெட்டாவது நிலை, பொறியியல் தொழில்நுட்ப பிரிவு, மாவட்டத்தில் முதலாவது நிலை, தேசிய மட்டத்தில் பதினான்காம் நிலை, கலைப்பிரிவு மாவட்டத்தில் முதலாவது நிலை, தேசிய மட்டத்தில் பதினாறாவது நிலைகளையும் இக் கல்லூரி மாணவர்கள் பெற்றிருந்தனர்.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள் மற்றும் சாதனையாளர்களின் பெற்றோர் கலந்து கொண்டனர்.



# மடவளையில் இரத்ததானம்

(எம்.எம்.ஜெஸ்மின்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏயின் மடவளை கிளை 16 ஆவது தடவையாக ஏற்பாடு செய்திருந்த இரத்ததான நிகழ்வு மடவளை சன் சைன் வரவேற்பு மண்டபத்தில் இடம் பெற்றது.

பிரதேச வைத்தியசாலைகளில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளிகள் பலர் கலந்து கொண்டு குருதி தானம் செய்தனர்.

இந்த் இரத்ததான முகாமில் வை.எம்.எம்.ஏயின் தேசிய தலைவர் இன்ஸான் ஹமீட், முன்னாள் தேசிய தலைவர் றிஸ்மி ஸஹீட், மடவளை கிளைத் தலைவர் நிஸாத் லத்தீப், பொதுச் செயலாளர் ஏ.எம்.ஹஸன் உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# கிழக்கிலும் மலையகத்திலும் சர்வதேச சிறுவர்தின நிகழ்வு

( வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மனித அபிவிருத்தி தாபனம் மலையகம் மற்றும் கிழக்கு மாகாணங்களில் பரவலாக பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது.

'அனைத்து சிறுவர்களையும் உள்வாங்கிக்கொள்' என்ற 2023 ஆம் ஆண்டு சிறுவர்தின தொனிப்பொருளுக்கு அமைய மனித அபிவிருத்தி தாபனம் பல்வேறு செயற்பாடுகளை கண்டி, நுவரெலியா, கேகாலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் பிரதான நிகழ்வு நாளை முதலாம் திகதி நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை பிரதேசத்தில் நடைபெறவுள்ளது என்று தாபன இணைப்பாளர் பி.சிறிகாந்த் தெரிவித்தார்.

இது தொடர்பாக திட்டமிடல் கூட்டம் அண்மையில் மனித அபிவிருத்தி தாபனத்தின் கொட்டகலை அலுவலகத்தில் நடைபெற்றது.

இச் செயற்பாட்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பிரதேச செயலகங்கள், பொது சுகாதாரத்துறையினர், தேசிய சிறுவர் அதிகார சபை, நன்நடத்தை அலகு, பொலிஸ், தோட்ட நிர்வாகங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை இணையவுள்ளன.

# டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்தால் சட்ட நடவடிக்கை

## கல்முனை சுகாதார பணிப்பாளர் றிபாஸ்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவுவதற்கான சூழல் ஏற்பட்டு வருகிறது. அதற்கேற்ற சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

தற்போது பரவலாக இடைவிட்ட மழை பொழிய ஆரம்பித்துள்ளது. இந்த கால நிலை டெங்கு நுளம்பு பெருகுவதற்கு உசிதமான சூழலை ஏற்படுத்தக் கூடும். இதனால் பொது மக்கள் மிகவும் விழிப்பாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டியது அவசியம்.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மூலமாக ஒவ்வொரு பிரதேசத்திலும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், சுகாதார வைத்திய அதிகாரிகள், சமூக மட்ட பொது அமைப்புகள், கிராம மட்ட விழிப்புணர்வு குழுவினர், சிரேஷ்ட பிரஜைகள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பின் தாக்கம் பற்றியும் அதிலிருந்து விடுபட வேண்டிய வழிமுறைகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் பங்களிப்போடு பாடசாலைச் சூழலை டெங்கு



நுளம்பற்ற பிரதேசமாக பேண வேண்டும்.

இவ்வாறான டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்துக்குப் பொது மக்களின் ஒத்துழைப்பு பெரிதும் அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga

மனவளக்கலை


# sky Yoga

நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும்

**sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள் (Sky Yoga Foundation Course )**



- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
**sky Yoga Center**
53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
0779 371 846
0777 364 885
0774 951 607



நடிகர் திலகம் – நூற்றாண்டு விழா அமைப்புக்குழு, கனடா

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் 'மாற்று நாடக இயக்கம்' | சென்னை 'யா-கார் தியேட்டர்' நாடகக்குழு

Yaa-Kar Theatre

இணைந்து நடத்தும்

## இணையவழிக் கருத்தரங்கம்

அறிமுகவுரை : 'கனடா' மூர்த்தி, ஆவணப்பட இயக்குநர், கலை இலக்கிய ஆர்வலர், கனடா

கருத்துரை : செல்வி சி.பா.ஆதிரை நஸ்ரீன், பள்ளி மாணவி, திருப்பத்தூர்

கருத்துரை : திருமிகு ரஷ்யா தங்கப்பன், நடிகர் திலகத்தின் நெருங்கிய நண்பர்

ஆய்வுரை : பேராசிரியர் பாலசுகுமார், நிறுவனர், அனாமிகா கலைப் பண்பாட்டு மையம், லண்டன்

சிறப்புரை : திருமிகு 'முக்தா' ரவி, சென்னை


விருந்துரை : திரைக்கலைஞர் ம.நாசர்

நன்றியுரை : திருமிகு 'யா-கார்' சு.வேலாயுதம், நாடகவியலாளர், சென்னை

நிகழ்வுத் தொகுப்பு : முனைவர் கி.பார்த்திபராஜா, பேராசிரியர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்



அனைவரும் வருக!



நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களின்

95 வது பிறந்த நாள் விழா

அக்டோபர் 1, 2023 (ஞாயிற்றுக்கிழமை)

இந்திய நேரம் மாலை 6:00 மணி முதல் 8:00 மணி வரை

zoom Meeting ID : 842 5407 2088 Passcode : 304876



# இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பில் இலங்கை கரிசனையுடன் செயற்படும்

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பேட்டி

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 23 ஆவது நினைவு தின நிகழ்வு, கடந்த 16 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் உள்ள சாய்ந்தமருதுவில் நடைபெற்றது. இதில் தமிழகத்தில் இருந்து வாணியம் பாடி, இஸ்லாமிய கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் முனைவர் கவிமாமணி அப்துல் காதர் கலந்து கொண்டு பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மர்ஹூம் அஷ்ரப் நினைவை முன்னிட்டு அவர் பற்றி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில முதன்மை துணைத் தலைவரும், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவருமான எம். அப்துல் ரஹ்மான் ஆகியோரின் கடிதம் வாசிக்கப்பட்டது.

பின்னர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 23 ஆவது நினைவு தினதினத்தை முடித்த நிலையில் கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் காலை முரசு மற்றும் மாலை முரசு ஆகிய நாளிதழிக்கு சிறப்பு பேட்டி அளித்தார்.

**கேள்வி:** இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் எப்படி இருக்கிறது?

**பதில்:** இலங்கை நாட்டில் பாரிய பொருளாதார சிக்கல் ஏற்பட்டு, அரசியல் மாற்றங்களும் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழலில், ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதிக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் ஒரே ஓர் உறுப்பினரை மட்டும் கொண்டுள்ள நிலையில், முந்தைய ஆட்சியாளர்களின் தயவில்தான் அவர் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்.

உள்ளாட்சித் தேர்தல்கள், மாகாண சபை தேர்தல்களைக் கூட முறையான காலகட்டத்தில் நடத்தாமல் நீண்ட காலமாக இழுத்தடித்துக் கொண்டு வருகிறார். மொத்தத்தில் தேர்தல் நடந்தால் ஆட்சியாளர்கள் தோல்வியடைவர் என்பது நிதர்சனமான உண்மை.

மொத்தத்தில் இவ்வளவு பெரிய பொருளாதாரச் சிக்கல்களுக்கு இடையிலும் பொதுமக்களின் மிகப்பெரிய அதிருப்திகளுக்கு இடையிலும் தமக்கு இருக்கும் போலியான பெரும்பான்மை பலத்தை கொண்டு ஆட்சியை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல முடியும்.

இந்தப் பின்னணியில், நாட்டில் நிலவி வரும் இந்தப் பொருளாதாரச் சிக்கல் காரணமாக, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில் – மின்சாரம், குடிதண்ணீர், வரி வகைகள் உள்ளிட்ட அனைத்திலும் கட்டணங்கள் அதிகரித்து, அதனால் பொதுமக்களுக்கு பெரும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறிருக்க, அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலையும் நடத்த வேண்டிய கட்டாயத்தில் நாடு உள்ளது. அப்படி நடக்கும் போது இந்த நாட்டில் ஓர் ஆட்சி மாற்றம் நிகழலாம் என்பது எதிர்க் கட்சிகளின் நம்பிக்கையாக இருக்கிறது. ஆயினும், எதிர்க்கட்சிகள் இரண்டு மூன்று பிரிவுகளாக இருக்கும் நிலையில் சஜித் பிரேமதாஷ தலைமையிலான அணிக்கும், ஜேவிபி அணிக்கும் இடையில் பலத்த போட்டி நிலவும் என்றும் அறிய முடிகிறது.

**கேள்வி:** முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தல் வர வாய்ப்பு இருக்கிறதா அல்லது இப்போதைய அரசின் பதவிக்காலம் முடிந்து, அடுத்த ஆண்டு தான் முறைப்படி தேர்தல் நடத்தப்படுமா?

**பதில்:** முன்கூட்டியே தேர்தலை நடத்துவது என்றால், தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. ஆனால் அதற்கு அவர் துணிவரா என்பதுதான் மிகப்பெரிய கேள்வியாக இருக்கிறது. அடுத்த வரவு – செலவுத் திட்டத்தில், தனக்கு எதிராக முந்தைய ஆட்சியாளர்கள் வாக்களிப்பார்கள் என்ற அச்சம் ஏற்பட்டால், தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவுக்கும் அவர் வரலாம் என்று ஒரு யூகமும் நிலவுகிறது.

**கேள்வி:** அப்படி தேர்தல் வந்தால் உங்களது நிலைமை எப்படி இருக்கும்?

**பதில்:** தற்போது நாங்கள் ஓர் அரசியல் கட்சியாக ஒரு கூட்டணியில் அங்கம் வகிக்கிறோம். எனவே, அந்தக் கூட்டணியின் இணைந்து போட்டியிட வாய்ப்பு இருக்கிறது அல்லது சில பல இடங்களில் தனித்துப் போட்டியிடவும் வாய்ப்பு இருக்கிறது. மொத்தத்தில் தேர்தலைச் சந்திப்பதற்கு நாங்கள் ஆயத்தமாகவே இருக்கிறோம்.

**கேள்வி:** தேர்தல் வந்தால் தற்போது எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஷ தலைமையிலான அணியில் அங்கம் வகிப்பீர்களா அல்லது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அணியில் இடம்பெறுவீர்களா?

**பதில்:** தற்போது எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஷ தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிப்பதற்குதான் பெருவாரியான வாய்ப்பு உள்ளது. என்றாலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களின் ஆதரவு குறையும் வாய்ப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பில்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது என்கிற நிலையில் – அவரையும், சஜித்தையும் ஒரே கூட்டணியில் ஒன்றிணைத்து தேர்தல் களத்தைக் காண்பதற்கான சில முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

**கேள்வி:** அப்படியென்றால், தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகுதான் உங்கள் கூட்டணி குறித்த தெளிவான நிலைப்பாடு தெரியவரும் என்று கூறுகிறீர்களா?

**பதில்:** அப்படியில்லை. வழமையாகவே நாங்கள் எந்தக் கூட்டணியுடன் தற்போது சார்ந்து இருக்கிறோமோ அதே அணியுடன் போட்டியிடும் வாய்ப்புதான் அதிகம். என்றாலும் ஓர் அரசியல் கட்சி – அதுவும் சிறுபான்மை அரசியல் கட்சி என்ற அடிப்படையில், எந்த ஒரு தெளிவான முடிவையும் சற்று தாமதித்து எடுக்கக் கூடிய சூழல்தான் எல்லோருக்கும் இருக்கிறது. அதிலும் ஆசன ஒதுக்கீடுகள் குறித்த சிக்கல்களில் தெளிவான ஒரு நிலைப்பாட்டைக் கண்ட பிறகுதான் கூட்டணி குறித்து தெளிவான நிலைப்பாட்டை நாங்கள் எடுக்க முடியும்.

**கேள்வி:** தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பயணித்துக் கொண்டிருக் கிறீர்கள். அரசியல் ரீதியாக அவர்களின் கருத்தும், உங்களின் கருத்தும் ஒத்துப் போகின்றதா?

**பதில்:** பெரும்பாலும் பல தருணங்களில் பொதுவான பிரச்சினைகளில் நாங்கள் ஒத்த கருத்துடன்தான் இருந்து வருகிறோம். சிறுபான்மையினருக்கு இடையிலான பல்வேறு பிரச்சினைகள், நாட்டின் அரசமைப்பு சட்டத் திருத்தம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் நாங்கள் உடன்பட்ட செயல்பாட்டுடன தான் இருந்து வருகிறோம்.

**கேள்வி:** கிழக்கு மாகாணத்தில் நடந்து வரும் பிரச்சினைகள் குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:** சிறுபான்மை சமூகத்தினரின் வாழ்வாதார மற்றும் சமய, கலாச்சார, மொழி சார்ந்த விடயங்களில் அடிக்கடி தேவையற்ற முறையில் தலையிடுவதும், பாரபட்சங்கள் காட்டுவதும் என்பது நீண்ட காலமாக நிகழ்ந்து வருகிறது. பல்வேறு இடங்களில் தமிழர்கள், முஸ்லிம்களுக்கு மீதான பௌத்த மேலாதிக்க நடவடிக்கைகள்தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொல்பொருள் முக்கியத்துவங்கள் வாழ்ந்த இடங்களில் அகழ்வாராய்ச்சி என்ற பெயரிலும், பல்வேறு இலாகாவைப் பாவித்து மக்கள் பயன்படுத்தி வரும் காணிகளைப் பறிமுதல் செய்வதும், கைப்பற்றுவதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அடிக்கடி பாரிய கலவர நிலவரங்களை தோற்றுவித்து வருகின்றனர்.

இதற்குப் பின்னணியில் முந்தைய ஆட்சியாளர்களின் சூழ்ச்சிகள் – குறிப்பாக பெரும்பான்மை சிங்களர்களின் உணர்வுகளைத் தூண்டி, அவர்களின் வாக்குகளைக் கவரும் நோக்கத்தைக் கொண்ட அரசியல் சித்து விளையாட்டுகளாகத்தான் இவற்றை நாங்கள் காண்கிறோம். என்னதான் இந்த ஆட்சியாளர்கள் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், தற்போதைய சூழலில், பெரும்பான்மை சிங்கள மக்களும் கூட அவர்களை ஆதரிக்கும் சூழல் மிகவும் குறைவாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது.

**கேள்வி:** கிழக்கு மாகாணத்தில் கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பகுதிகளில் சில பிரச்சினைகள் நடைபெற்று இருக்கின்றனவே? அண்மையில் கூட மறைந்த அஷ்ரப் அவர்களது நினைவேந்தல் நிகழ்ச்சியில் ஒரு சலசலப்பு ஏற்பட்டதே? ஏன் அப்படி?

**பதில்:** சாய்ந்தமருதுக்கு தனியான பிரதேச சபை தேவை என்று கோரிக்கை குறித்து அரசு முடிவெடுக்கின்ற சூழலில், கல்முனை மாநகர சபை குறித்த எல்லை விவகாரமும் ஒரு சிக்கலை ஏற்படுத்துகிறது. எனவே, இந்தப் பிரச்சினைகளை ஒட்டுமொத்தமாகத் தீர்ப்பதன் மூலம்தான் ஒரு நியாயமான தீர்வை எட்ட முடியும். ஒரே பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கிடையே இது போன்ற சிக்கல்கள் இருக்கும் சூழல் வழமையான ஊர்வாத அரசியலை நடத்தும் அரசியல்வாதிகளுக்கு குளிர் காய்வதற்கான வாய்ப்பை உண்டாக்கி விடும். இந்த விடயத்தில் நாங்கள் தொடர்ந்து நடுநிலைத் தன்மையையே பேணி வருகிறோம். அதே நேரத்தில், சாய்ந்தமருது மக்களிடையே சாய்ந்தமருதுக்கு தனி பிரதேசம் வேண்டும் என்ற மக்களின் நீண்டகால கோரிக்கை நிறைவேறும், நிறைவேற வேண்டும் என்ற விடயத்தில் உறுதியாகவும் இருக்கிறோம்.

ஆனால் இதை வைத்துக் கொண்டு அரசியல் செல்வாக்கு இழந்த ஒரு சிலர் மக்களிடையே – குறிப்பாக ஜும்ஆ நேரத்தில் குழப்பங்களை ஏற்படுத்தி, எங்களுக்கு இருக்கின்ற செல்வாக்கு குறைந்து விட்டதாக மக்களிடையே காட்ட முயற்சித்தார்கள். ஆனால், அவர்களது அந்தக் கோமாளித்தனமான செயல்பாடுகளையும் மீறி, அந்த ஊரிலேயே மிகப் பிரமாண்டமாக எங்கள் தலைவரின் நினைவேந்தல் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

**கேள்வி:** அடுத்த ஆட்சி சஜித் பிரேமதாசா தலைமையில் வந்தால் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படுமா?

**பதில்:** நிரந்தரத் தீர்வைப் பெறுவதற்காக எல்லாக் கோணங்களிலும் நாங்கள் எங்கள் முயற்சியை மேற்கொள்வோம். அனைத்து தரப்பு மக்களின் நியாயமான உணர்வுகள், கோரிக்கைகள் உள்ளிட்ட அனைத்தையும் நிறைவேற்றி, அனைத்து தரப்பினரின் திருப்தியையும் பெறக்கூடிய அளவில் எங்களது நடவடிக்கைகள் அமையும்.

**கேள்வி:** ஓரிரு நாள்களுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான சர்வதேச விசாரணை குறித்து ஒரு சில கருத்துக்கள் பேசப்பட்டிருக்கின்றன. அதன் உண்மை நிகழ்வுகள் வெளிக்கொண்டுவரப்படுமா?

**பதில்:** உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் கிட்டத்தட்ட எண்ணூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட அப்பாவி உயிர்கள் பலியானது மட்டுமலல்ல நாட்டுக்கு உள்ளே மிகப்பெரிய இஸ்லாமிய தீவிரவாதம் ஊடுருவி இருக்கிறது என்ற பழிச் சொல்லையும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயமும் தாங்கிக் கொள்ள வேண்டிய சூழல் இருந்தது. முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான அச்சுறுத்தல் நடவடிக்கை மாத்திரமல்ல இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் போதுமான காரணம் எதுவும் இன்றி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வுகளும் நடைபெற்றன.

தற்கொலையாளிகள் தீவிரவாத கொள்கைகள் கொண்டிருந்தார்கள் என்பதையும் மறுப்பதற்கு இல்லை. ஆனால், அவர்களை வேண்டுமென்றே மூளைச்சலவை செய்து, தங்களது அரசியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது ஆட்சியாளர்களுக்கு எதிராக அண்மைக் காலமாகவும், நீண்ட காலமாகவும் படிப்படியாக மறைமுகமாகக் கசிந்து வரும் உண்மைகள் இப்பொழுது வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன.

இந்தப் பின்னணியில், ஜெனிவாவில் சர்வதேச மனித உரிமை சபைக்கு முன்னால் உண்மைத் தகவல்களை அரசோடு சேர்ந்து இருந்த ஒரு சில குழுவினர் சத்திய பிரசாத் விசாரணை மூலம் வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பின்னணியில் அரச குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களும், முன்னாள் தமிழ் ஆயுதக் குழுவில் இருந்தவர்களும் முன்வந்து சில உண்மைத் தகவல்களைப் பேசத் தொடங்கியுள்ளனர்.

இதற்கு முன்பும் கசிந்த சில விவகாரங்களோடு, இப்போதைய நிலவரத்தையும் ஒத்துப் பார்க்கையில், இதன் பின்னணியில் ஒரு மிகப்பெரிய அரசியல் சதி இருந்திருக்கிறது என்கிற விடயம் நாட்டு மக்களிடையே பரவலான பேசுபொருளாக இன்று மாறியிருக்கிறது. முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பரப்புரைகளும் வேண்டுமென்றே தூண்டி விடப்பட்ட

(13 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பில்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில்தான் அமைந்தது என்பது இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக் கிறது என்பது ஒரு பெரிய ஆறுதலுக் குரிய விஷயமாகும்.

உண்மையைக் கண்டறியும் விவ காரத்தில், மிகத் தீவிரமான – நியாய மான விசாரணை நடக்க வேண்டும் அது சர்வதேச மேற்பார்வையில் அமைந்திட வேண்டும் என்ற ஓர் அழுத் தம் இப்பொழுது சிறுபான்மையினர் தலைமைகளில் இருந்து மாத்திரமல்ல பெரும்பான்மை பௌத்த – சிங்கள மக்களின் தலைமைகளிலிருந்தும் – குறிப்பாக, பாதிக்கப்பட்ட கத்தோலிக்க திருச்சபையின் ஊடாகவும் பலமாக விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**கேள்வி:** தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய தாக்குதலை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் முஸ் லிம்களுக்கு ஆதரவாகப் பேசியி ருக்கிறார்களா?

**பதில்:** இந்தப் பின்னணியில் சில சதிகள் இருந்திருக்கலாம் என்பதை தமிழ் எம்பிக்களும் அவ்வப்போது பேசி வந்திருக்கிறார்கள். அண்மைக் காலமாக வெளிவந்திருக்கிற ரகசிய தகவல்கள் – தமிழ் மக்கள் உரிமைப் போராட்ட விவகாரத்திலும் அரசுக்கு உறுதுணையாக இருந்த சிலர் தமது சொந்த இலாபத்துக்காக, கூலிக்காகக் கொலை செய்கிற குழுவினராக செயற் பட்டு இருக்கின்றனர் என்ற மறைக்கப் பட்ட மிகப்பெரிய உண்மைகள் பல இன்று பட்டவர்த்தனமாக வெளிவந் திருக்கின் றன. இவையனைத்தும் இணைந்து தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைப் போராட்டத்தில் இணைந்து குரல் கொடுக் கும் நிலையை ஏற்படுத் தியிருக்கிறது.

**கேள்வி:** இலங்கையைப் பொருத்த வரை – சீனாவின் ஆதிக்கம் அதிக அளவில் காணப்படுகிறது. இது தொடர் பில் இந்தியாவின் கோபமும் இருப்ப தாகத் தெரிகிறதே? இது குறித்த உங்கள் கருத்து என்ன?


**பதில்:** இந்தியா எங்கள் அண்டை நாடு என்கிற நிலையில், அதன் பாது காப்பு தொடர்பான அம்சத்தில் இலங்கை கூடுதல் கவனத்தைச் செலுத்த வேண்டிய கட்டாயம் இருக் கிறது என்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டும். இலங் கையின் தற்போதைய பொருளாதார சூழலில், சீன நாட்டிடம் இருந்து பெருந் தொகை யைக் கடனாகப் பெற்றிருக்கிற சூழலில், அந்தக் கடனை மறுசீரமைத்தல் தொடர்பான விவகாரத்தில் சீன அரசாங் கத்தைப் பகைத்துக் கொள்வதும் எங்களுக்குப் பாரிய பாதிப்பை உண டாக்கிவிடும் சூழல் இருப்பதால், இந்த விடயத்தை ராஜதந்திரமாக, மிகவும் அவதானமாக அணுக வேண்டிய நெருக் கடியான நிலைக்கு அரசு உள்ளாகி இருக்கிறது.

இந்த நிலையில்தான் இந்தியாவுக் கும், சீனாவுக்கும் இடையே இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஒரு கடல் பிராந்திய பாதுகாப்பு தொடர்பான விவ காரங்களில் ஏற்படுகிற துரதிஷ்டவசமான போட்டி நிலவரங்கள் இலங்கை போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாட்டின் ஆட்சியாளர்களுக்கு, கடந்த பல வருடங்களாக சவாலாகவே இருந்து வந்திருக்கிறது.

இதை சர்வதேச கடல் போக்குவரத்து, கடல் பிராந்திய பாதுகாப்பு நடவடிக்கை ளின் சட்டபூர்வமான நியாயங்களின் அடிப்படையில் ஒரு நிரந்தரப் புரிதலை உருவாக்கி, அதன் மூலம்தான் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது.

ஆனால் அது இந்திய அரசின் கருத் துகளை உள்வாங்கி, அதற்கான புரித லையும் கொண்டதாக அமையும் வகையில் அரசு தற்பொழுது நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது.

**எம்.கே. ஷாகுல் ஹமீது,**
மூத்த ஊடகவியலாளர்,
திருச்சி.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று (29.09.2023) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சரும், இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவின் தலைவருமான திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள் சந்தித்து, இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால சட்டத் தீர்வுகள் அடங்கிய இடைக்கால அறிக்கையினை சமர்ப்பித்தார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., குழுவின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, பொதுத்துறை செயலாளர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் மற்றும் உறுப்பினர்–செயலர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், இ.ஆ.ப., உள்துறை துணைச் செயலாளர் திருமதி சித்ரா, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையாளர் திரு. சச்சிதானந்தவளன், கல்வியாளர் திரு. இரா. இளம்பரிதி, அரசமைப்புச் சட்ட வல்லுநர் திரு. மனுராஜ் சண்முகசுந்தரம், ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தின் செயலாளர் (OFERR) செல்வி சூரியகுமாரி, அட்வெண்டிஸ்ட் வளர்ச்சி மற்றும் மறுவாழ்வு நிறுவனத்தின் திட்ட இயக்குநர் (ADRA) திரு. இக்னேசியஸ், இயேசு சபை புலம்பெயர்ந்தோர் பணி இயக்குநர் அருட்தந்தை பால்ராஜ் மற்றும் பேராசிரியர் கே.எம். பாரிவேலர் ஆகியோர் உடனிருந்தனர்.

# இலங்கைத் தமிழர் நலன் பேணும் குழுவின் அறிக்கை ஸ்டாலினிடம்!

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கைத் தமிழர்களின் நலன்க ளைப் பேணும் ஆலோசனைகளை அளிக்க அமைக்கப்பட்ட குழு, தனது இடைக்கால அறிக்கையை இந்திய முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வெள்ளிக் கிழமை கையளித்தது.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வரிடம் இந்த அறிக்கையை குழு வின் தலைவர் கே.எஸ்.மஸ்தான் சமர்ப் பித்தார். பல்வேறு காலகட்டங்களில் இலங் கையிலிருந்து வரும் தமிழர்களுக்கு நலத் திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்தக் குழுவின் துணைத் தலைவ ராக வடசென்னை மக்களவை உறுப் பினர் கலாநிதி வீராசாமி, உறுப்பினர் களாகச் சட்டப் பேரவை உறுப்பினர் தமிழரசி, பல்வேறு துறைகளின் உயர் அலுவலர்கள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், மூத்த பத்திரிகையாளர், சட்ட வல்லுநர் உள்ளிட்ட பலர் இடம் பெற்றுள்ளனர்.



# படுகொலை நினைவு நிகழ்வு

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி–சங்கத்தானையில் செப்ரெம்பர் 28 இடம்பெற்ற படுகொலையின் நினைவு நிகழ்வு அங்கு அமைந்துள்ள படுகொலை நினைவு முற்றத்தில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

சாவகச்சேரி–சங்கத்தானை சாரதா வீதியில் உள்ள மரக்காலை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழி மீது இலங்கை விமானப்படையின் இரண்டு புக்காரா விமானங்கள் நடத்திய தாக்குதலில் பதுங்கு குழிக்குள் இருந்த 20 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். அதில் 12 பேர் சிறார்கள்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட 20ஆத்மாக்களினதும் உறவுகளின் ஏற்பாட்டில் 30 ஆவது நினைவு தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது சாரதா சனசமூக நிலையத்தில் இருந்து தீப ஊர்வலத்துடன் வருகை தந்து படுகொலை நினைவு முற்றத்தில் அமைந்துள்ள நினைவாலயத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் வான்படைத் தாக்குதலில் தனது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளை பறிகொடுத்திருந்த முதியவர், தனது தந்தை மற்றும் இரண்டு சகோதரிகளை பறிகொடுத்திருந்த இளைஞன் என உயிரிழந்தவர்களின் உறவினர்கள், மதகுருமார்கள், கிராம மக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.



## தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்று கூடல் நிகழ்வுகள் இன்று

**(எம்.எப்.நவாஸ்)**

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவும், ஒன்று கூடலும் புதிய நிருவாகத் தெரிவும் இன்று (30) இரவு 7 மணிக்கு அட்டாளைச்சேனை யாடோ விடுதியில் இடம் பெறவுள்ளது.

நுஜா ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ். எம்.அறூஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கரையோரப் பிரதேசங்களுக்கான அபிவிருத்திக் குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த ஒன்றுகூடலின்போது கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பலவிடயங்கள் பற்றியும், ஒன்றியத்தின் எதிர்காலத்திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது. பின்னர் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

## கொட்டகலையில் குளவி கொட்டி 7 பெண்கள் ஆஸ்பத்திரியில்

**(மஸ்கெலியா நிருபர்)**

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் தோட்டத் தொழிலாளர்கள் மீது குளவி கொட்டியதில் 7 பேர் பாதிக்கப்பட்டு கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று திம்புள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொட்டகலை பகுதியில் உள்ள கிரேக்லி தோட்டத்தைச் சேர்ந்த 7 பெண் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது தேயிலை செடிகளின் கீழ் பகுதியில் இருந்த குளவிக்கூடு கலைந்து கொட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்குப் பல்கலைக்கழகம் பொதுமக்கள் பார்வைக்கு!

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை, கிழக்குப் பல்கலைக் கழகம் 2023 ஒக்ரோபர் மாதம் தனது 42 ஆவது ஆண்டு விழாவைக் கொண் டாடவுள்ளது. இந்த வகையில் நாளை ஒக்டோபர் முதலாம் திகதி முதல் ஒக் ரோபர் 8ஆம் திகதிவரை பல்கலைக் கழக வாரம் பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது.

இவ்வாரத்தை சிறப்பிக்கும் வகை யில் இப்பிராந்தியத்தில் உள்ள பொது மக்களுக்காக ஒக்ரோபர் 3 ஆம் திகதி 'திறந்த தினம்' எனும் பெயரில் ஒரு தினத்தை நடத்த பல்கலைக்கழக சமூ கம் முடிவு செய்துள்ளது.

இந்த நிகழ்வு இப்பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக நடத்தப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சிறப்பு நிகழ்வுக்குப் பாட சாலை மாணவர்கள், பெற்றோர்கள், தொழில் முயற்சியாளர்கள், விவசாய மற்றும் மீனவர் சங்கங்கள் மற்றும் சிறுதொழில்துறையினர் சார்ந்த சமூகத்தை பல்கலைக்கழகத்துக்கு வருகை தருமாறு பல்கலைக்கழக நிர் வாகம் அழைப்பு விடுக்கின்றது. இத் தினத்தில் பங்குபற்றுவோருக்கு பின் வரும் விடயங்கள் தொடர்பாக பெறு மதியான விளக்கவுரை கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

இதனடிப்படையில் தொழில் வழி காட்டல் மற்றும் ஆலோசனை, அறிவியல் சோதனைகள் தொடர்பான நடைமுறை விளக்கங்கள் மற்றும் செயல் விளக்கங்கள், கல்விச் சூழலின் கண்ணோட்டம், நூலக வசதிகளைப் பெற்றுக் கொள்ளல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவூட்டல், பல்கலைக்கழக மாணவர் அனுமதி நடைமுறை குறித்த வழிகாட்டுதல், பல்கலைக்கழக வாழ்க்கை மற்றும் கல்வி வாழ்க்கையின் வேறு அம்சங்கள் போன்ற விடயதானங்களில் விளக்க வுரைகள் வழங்கப்படவுள்ளன.



# விஞ்ஞான வினாடிப் போட்டி: தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தால் மாவட்டத்தின் முன் னணி தேசிய பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் அம்பாறையில் இடம் பெற்ற விஞ்ஞான வினாடிப் போட்டி யில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூ ரி மாவட்டத்தில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட் டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாகாண மட்ட போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது.

எம்.எம்.பாத்திமா அஸ்தா ஹனானி, எம்.என். பாத்திமா சப்றினா, எம்.எஸ். பாத்திமா நுஷா, எம்.ஐ.பாத்திமா ஹாஜிஸ்தா, ஆர்.எப்.ஹனீனா நாதா ஆகிய மாணவிகள் வெற்றிபெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகி கல்லூ ரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

# சுற்றுலா தினத்தில் மரம் நடுகை

(எம்.எப்.நவாஸ்)

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு பசுமை புரட்சி பாலமுனை கடற்கரையில் மரம் நடும் நிகழ்வு பிரகாச மான இளைஞர் அமைப்பால் நேற்று (29) முன்னெடுக் கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு கரை யோரம் பேணல் திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.கியாத் முஹம்மட் மற்றும் மாவட்ட இளைஞர் சம்மேளன தலை வர் முஹம்மட் றிப்கான், எம். ஆர்.றஹ்மதுல்லாஹ்-சீதா, ஏ.எல்.எம்.றனீஸ், ஆகியோர் பங்குபற்றினர்.





# ‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்’ கண்காட்சி மணியந்தோட்டத்தில்

(எஸ்.நிதர்ஷன்)

‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்’ எனும் தொனிப் பொருளில் மாபெரும் கண்காட்சியொன்று இன்று சனிக்கிழமை யாழில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரித்தாஸ் – கியூடெக் நிறுவனத்தின் வழிநடத்தலில் யாழ். மணியந்தோட்டம் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் கீழ் இயங்கும் இணைந்த கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இக் கண்காட்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கரித்தாஸ் – கியூடெக் நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை யூஜின் பிரான்சிஸ் அடிகளார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இக் கண்காட்சியில் ஐக்கிய இலங்கை, மணிப்புரி விற்பனையகம், மறைந்து வரும் பழங்காலத்து பாவனைப் பொருள்கள், கும்மாளக்குதிப்பு, யாழ் மன்னர்கள், கழிவு பொருள் கலைநயம் உள்ளிட்ட தலைப்புகளில் கண்காட்சி கூடங்கள் அமைக்கப்பட்டு கண்காட்சி பொருடள்கள் காட்சிபடுத்தப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கரித்தாஸ் கியூடெக் நிறுவன பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# யாழ். இந்துக் கல்லூரியில் சுகாதார மேம்பாட்டு அலகு

## பழைய மாணவன் சாரங்கன் ஞாபகார்த்தமாகத் திறப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினரும் பழைய மாணவனுமான அமரர் வைத்திய கலாநிதி வேலாயுதம் சாரங்கனின் ஞாபகார்த்தமாக அவரது பெற்றோரின் நிதிப் பங்களிப்புடன் பழைய மாணவர் சங்கத்தால் புனரமைக்கப்பட்ட இந்துக் கல்லூரி சுகாதார மேம்பாட்டு அலகு திறப்பு விழா நிகழ்வு சாரங்கனின் பிறந்த தினமான இன்று காலை நடைபெற்றது.

கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் வைத்திய கலாநிதி கோ. றஜீவ் தலைமையில் கல்லூரி ஞானவைரவர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளுடன் இந் நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது.

நிகழ்வில் அமரர் வைத்திய கலாநிதி வேலாயுதம் சாரங்கனின் பெற்றோர், கல்லூரி பிரதி அதிபர் எஸ். பரமேஸ்வரன், வைத்திய கலாநிதி சி. சிவதாஸ், மாணவர் சங்க தலைவர் வைத்திய கலாநிதி கோ. றஜீவ் ஆகியோர் சுகாதார மேம்பாட்டு அலகினைத் திறந்து வைத்து நினைவுக் கல்லைத் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

சாரங்கனின் திருவுருவப் படத்துக்குச் சாரங்கனின் தாயார் விளக்கேற்றி மலர்மாலை அணிவித்தார்.

# மணிப்பூர் முதல்வர் வீட்டுக்குள் நுழைவதற்கு முயற்சித்த கும்பல்!



மணிப்பூர் முதல்வர் என்.பிரேன் சிங் வசிக்கும் வீட்டை 500 முதல் 600 பேர் கொண்ட கும்பல் முற்றுகையிட்டு வீட்டுக்குள் நுழைய முயற்சித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்கள் விரட்டப்பட்டுள்ளனர்.

மணிப்பூரில் மாதக்கணக்கில் மைத்தேயி, குகி இனத்தவர் இடையே மோதல் நீடித்து வருகிறது. இந்த கலவர சம்பவங்களால் இதுவரை அங்கு 180 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள் ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். மேலும் ஏராளமான பேர் வீடுகளை விட்டு வெளியே அரசு அமைத்துள்ள நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.

இந்த கலவரத்தை கட்டுப்படுத்த தவறியதற்காக முதல்வர் பிரேன் சிங்குக்கு தொடர்ந்து எதிர்ப்பு வலுத்து வருகிறது. இந்த நிலையில் இம்பாலில் உள்ள அவரது பூர்வீக வீட்டை நோக்கி சுமார் 500 முதல் 600 பேர் கொண்ட கும்பல் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் திரண்டு வந்துள்ளது. வீட்டுக்கு அருகே வந்த அவர்கள் வீட்டை முற்றுகையிட முயற்சி செய்தனர். இதையடுத்து அவர் களை, சுமார் 100 மீட்டர் தூரத்திலேயே அங்கு பாதுகாப்புக்கு இருந்த பொலிஸார் தடுத்து நிறுத்தினர். ஆனால் பொலிஸாரையும் மீறிமுதல்வரின் வீட்டுக்குள் நுழைந்து தாக்குவதற்கு அவர்கள் முயன்றனர்.

இதையடுத்து பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தி திரும்பிச் செல்லுமாறு விரட்டினர். இதையடுத்து அவர்கள் கலைந்து சென்றனர். இதன் மூலம் முதல்வரின் பூர்வீக வீட்டை தாக்கும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இம்பாலில் உள்ள அரசு வீட்டில் பிரேன் சிங் தங்கியிருப்பதால், அவரது பூர்வீக வீட்டில் தற்போது யாரும் வசிக்கவில்லை. இருப்பினும் மாநிலத்தில் கலவரம் நீடிப்பதால் அந்த வீட்டுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# மகளிர் இடஒதுக்கீடு சட்டமூலம் சட்டமானது: குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார்!



வரலாற்று சிறப்புமிக்க மகளிர் இடஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

மக்களவை மற்றும் சட்டப்பேரவை களில் பெண்களுக்கு 33 சதவீத இடங்களை ஒதுக்க வகை செய்யும் மகளிர் இடஒதுக்கீடு சட்டமூலம், புதிய நாடாளுமன்ற கட்டடத்தில் முதல் சட்ட மூலமாக இம்மாதம் நிறைவேற்றப் பட்டது.

மக்களவையில் இந்த சட்டமூலம் கடந்த 19 ஆம் திகதியும் மாநிலங்கள வையில் 21 ஆம் திகதியும் நிறை வேற்றப்பட்டது. மக்களவையில் இதற்கு ஆதரவாக 454 உறுப்பினர்கள் வாக்க ளித்தனர். ஏ.ஐ.எம்.ஐ.எம். கட்சியின் 2 எம்.பி.க்கள் மாத்திரம் எதிராக வாக்களித்தனர். முஸ்லிம் பெண்கள் மற்றும் ஓ.பி.சி. பெண்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்று அக்கட்சி காரணம் கூறியது. காங்கிரஸ் கட்சியும் ஓ.பி.சி. பெண்களுக்கு உள் ஒதுக்கீட்டை வலியுறுத்தியது.

புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறைக்கு பின்னரே மகளிர் இடஒதுக்கீடு நடை முறைக்கு வரும். இந்த நிலையில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் 2024 மக்களவைத் தேர்தலிலேயே இதனை அமுல்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதையடுத்து இந்த சட்டமூலம் மாநிலங்களவையில் விவாதிக்கப்பட்டு, கடந்த 21 ஆம் திகதி ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது. 215 உறுப்பினர்கள் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித் தனர்.

நாடாளுமன்றத்தின் இரு அவை களிலும் இந்த சட்டமூலம் நிறை வேறியதை தொடர்ந்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த நிலையில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று ஒப்புதல் அளித்துள்ளார். இதையடுத்து இந்த சட்டமூலம் சட்டமாக மாறியது. இதனை மத்திய அரசு தனது அரசிதழில் அறிவிக்கையாக வெளியிட்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறைக்கு குறைந்தபட்சம் 6 ஆண்டுகள் ஆகும் என்பதால் 2029 தேர்தலில் மகளிர் இடஒதுக்கீடு நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 1996 ஆம் ஆண்டு அப் போதைய பிரதமர் தேவகவுடா ஆட்சியில் மகளிர் இடஒதுக்கீடு சட்டமூலம் முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் நிறைவேற்றப்படவில்லை.

1998 இல் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் இந்த சட்டமூலம் மீண்டும் அறிமுகம் செய்யப் பட்டது. அப்போதும் போதிய ஆதரவு இல்லாததால் மசோதா காலாவதியானது. 1999, 2002, 2003 ஆம் ஆண்டுகளில் சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேறாமல் போனது. 2010 இல் இந்த சட்டமூலம் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் மக்களவையில் நிறை வேற்ற முடியவில்லை. சுமார் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சியில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

# நியூயோர்க்கில் கடும் புயல்: அவசர நிலை பிரகடனம்!




அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பெய்த கனமழையால் மற்றும் ஆபத்தான புயலால் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், நியூயோர்க் பெருநகரப் பகுதியிலும் கிழக்கு கடற்கரையை அண்டிய பிற முக்கிய நகரங்களிலும் சுமார் 18 மில்லியன் மக்கள் வெள்ள எச்சரிக்கை நிலையை எதிர்கொண்டனர்.

அமெரிக்காவின் அதிக மக்கள் தொகை கொண்ட நகரத்தில் பெய்த கனமழையால் வீதிகள் சிறிய ஏரிகளாக மாறின.

கனமழை காரணமாக நியூயோர்க் நகரத்திற்கு வெள்ள எச்சரிக்கை தேசிய வானிலை சேவையால் விடுக்கப்பட்டது.

உயரமான இடத்திற்குச் சென்று உங்கள் உயிரைப் பாதுகாக்க விரைவாக செயல்படுங்கள் என்று தேசிய வானிலை சேவை தனது வலைத்தளத்தில் வெளியிடப்பட்ட ஒரு ஆலோசனையில் தெரிவித்துள்ளது.

கடும் மழை காரணமாக நியூயோர்க் நகரம், லாங் தீவு மற்றும் ஹட்சன் பள்ளத்தாக்கு பகுதிகளில் அவசர நிலை பிரகடனம் செய்ய நியூயோர்க் ஆளுநர் கேத்தி உத்தரவிட்டுள்ளார்.

பாதுகாப்பாக இருக்க நடவடிக்கை எடுங்கள், வெள்ளம் சூழ்ந்த வீதிகளில் பயணிக்க முயற்சிக்க வேண்டாம் என்று அவர் சமூக ஊடக தளத்தில் வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

# பிரித்தானியாவில் பாடசாலை பேருந்து விபத்து!



பிரித்தானியா -மெர்சிசைடு பகுதியில் பாடசாலை பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் ஜெசிகா பேக்கர் என்ற 15 வயதுச் சிறுமி மற்றும் பேருந்து சாரதி ஆகியோர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று காலை 8 மணிக்கு பின் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தின் போது பேருந்தில் மொத்தமாக 54 பேர் பயணித்துள்ளனர் என கூறப்படுகிறது.

அவர்களில் பலர் சிறிய காயங்களுடன் அருகில் இருந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பாகிஸ்தானில் 3 நாள்கள் துக்க தினம் அனுஷ்டிப்பு

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 58 பேர் உயிரிழந்தனர். 100 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த நிலையில், அங்கு 3 நாள்கள் துக்க தினம் அனுஷ்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மஸ்துங் நகரில் மிலாது நபி பிறந்த நாளை ஒட்டி மக்கள் பள்ளிவாசலில் வழிபாட்டில் ஈடுபட்ட போது வாசலில் பொலிஸாரின் வாகனத்தின் அருகே நின்றிருந்த தற்கொலைப்படையைச் சேர்ந்த நபர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார்.

இந்த சம்பவத்திலேயே 54 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு எந்த பயங்கரவாத அமைப்புகளும் பொறுப்பேற்கவில்லை.

இதேவேளை. ஹங்கு மாவட்டத்திலும் பயங்கரவாதிகள் மசூதிக்குள் புகுந்து வெடிகுண்டை வெடிக்கச்செய்தனர்.



இதில் 4 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையிலேயே, பாகிஸ்தானில் துக்க தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.